# வடக்கில் மீண்டும் யு.என்.எச்.சி.ஆர். செயற்படும்

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலய (யு. என். எச். சி. ஆர்.) பிரதிநிதிகள் நேற்று விடுதலைப் புலிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து வட மாகாணத்தில் மீண்டும் நிவாரணம் மற்றும் வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க அவர்கள் முடிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நடந்த பேச்சுக்களில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் சார்பில் கொழும்பு பாதுகாப்பு அதிகாரி கலாநிதி பீற்றர் நிக்கலஸ், யாழ் வதிவிடப் பிரதிநிதி திரு. அசோகனும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன்

(6-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 14 இதழ் 345
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-1-1994

## ஐ.சி.ஆர்.சி. அதிகாரிகள் புலிகள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு குறித்தும், பாதுகாப்பு வலயம் குறித்தும் உணவுக் கப்பல் போக்குவரத்துக் குறித்துமே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை இடம்பெற்றதென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். வதிவிடப்பிரதிநிதி செற்றிக் பிரவோ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள ஆசிய விவகாரங்களுக்கான பிரதிநிதி ஜென்ரேகஸ் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டொமினிக் டோவோ ஆகியோர் தாம் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன்

(6-ம் பக்கம் பார்க்க)

★ மீண்டும் ஒரு கட்சித் தாவல்

# ஐ.தே.க.வில் காமினி சேர்ந்தார்; உடன் அமைச்சர் பதவி இல்லை!

## டி. பி.யின் கை பலமாகும்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்களில் ஒருவரான திரு. காமினி திசநாயக்கா நேற்று ஐக்கிய தேசியக் கட்சியில் முறைப்படி சேர்ந்துகொண்டார். இவருடன் வேறு சிலரும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துகொண்டனர். திரு. காமினிக்கு உடனடியாக அமைச்சர் பதவி வழங்கப்படுமா என்பது குறித்து மௌனமே நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரதமர்ரணில், கூரே பகிஷ்கரிப்பு!

(கொழும்பு)

காமினி திசநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட நிகழ்வின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐ. தே. க. செயலாளர் சிறிசேன கூரே ஆகியோர் சமூகமளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய இலங்கை உருவாக ஜனாதிபதிக்கு உதவுவேன்

\- காமினி கூறுகிறார்

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் மக்களால் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனக் கட்சியின் கொள்கைகளை தெரிவு செய்யப்பட்ட பிரதிபதாலேயே தாம் ஐக்கியமும் குறிக்கோள்களையும் நிதிலை உள்படம் பெருட் தேசியக் கட்சியில் சேரும் ஜனநாயக ஐக்கிய தேசிய பாலிமையான உறுப்பினர்கள்

(2ம் பக்கம் பார்க்க)

## முக்கிய பிரச்னைக்கு உடன் தீர்வு இல்லை

(லண்டன்)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திசநாயக்காவும் அவரது குழுவினரும் ஐ. தே. கட்சியில் சேர்ந்ததோடு, இனி வருங்காலத்தில் இலங்கையில் இரு கட்சி அரசியலே முதன்மை பெறக்கூடும் என டி. பி. சி யின் கொழும்பு நிருபர் தெரிவித்துள்ளார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையுடன் மனம் வைத்தால் சமாதானம் கிடைக்கும்

### ஆயர் நிக்கலஸ் மார்க்கஸ் தெரிவிப்பு

(நெல்லியடி)

"இருதரப்பினரும் நம்பிக்கையுடன் மனம் வைத்தால் சமாதானம் கிடைக்க வழியுண்டு. இங்குள்ள மக்களின் நிலைமைகளை அறிந்து தொடர்ந்து முயற்சி செய்வோம்.

இவ்வாறு இலங்கை கத்தோலிக்க திருச் சபையின் அதிமேற்றிராணியார் அதிவணக்கத்துக்குரிய நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை பருத்தித்துறை இறங்குதுறையில் வைத்து எமது நெல்லியடி நிருபருக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

காங்கேசன்துறையிலிருந்து வாதுவ கப்பல் மூலம் நேற்

(5ம் பக்கம் பார்க்க)

## குண்டுவீச்சை நிறுத்துமாறு அரச அதிபர் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை விமானப் படையினர் யாழ். பிராந்தியத்தில் கண்டபடி குண்டு வீசுவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் அரசாங்கத்தை கேட்டுக் கொண்டுள்ளார்.

(6ம் பக்கம் பார்க்க)

## 2 பாகிஸ்தானியர் கொழும்பில் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று அதிகாலை இரண்டு பாகிஸ்தான் நாட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

55 லட்சம் ரூபாக்கும் மேலான மதிப்புடைய 4 கிலோகிராம் ஹெரோயின்

(5-ம் பக்கம் பார்க்க)

★ புலிகளுக்கு எதிரான போரில்

## 30,000 பௌத்த பிக்குகள் இரத்தம் சிந்தத் தயாராம்!

(கொழும்பு)

பிரபாகரனுக்கு எதிரான போரில் 30,000 பௌத்த பிக்குகள் இரத்தம் சிந்தத் தயாராக உள்ளதாக டெய்லி நியூஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பௌத்த தேசாபிமான பிக்கு முன்னணியைச் சேர்ந்த இவர் 'இலுமின' கமுவ நாலந்த தேரோ கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளை நிராயுதபாணிகளாக்கிய பின்னரே அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென்று அவர் அரசைக் கோரியுள்ளார். அத்துடன் வெளிநாட்டவரின் சமாதான முயற்சிகளை

(6ம் பக்கம் பார்க்க)

## புதிய கண்ணிவெடி அறிமுகமாகிறது

(லண்டன்)

அமெரிக்கா தற்போது தயாரித்துவெளியிடும் கண்ணிவெடியே மிக ஆபத்தானது. இந்த கண்ணிவெடி வெடிக்கும் போது அதிலிருந்து 800 குண்டுகள் பல்வேறு திசைகளில் தெறித்தடிக்குமாம். இதனால் அந்த இடத்தில் பல பேர் மடிய ஏதுவாகும். இதைவிட ஒரு படி மேல்

(6-ம் பக்கம் பார்க்க)

மணிவாசகம்

பயப்பட வேண்டிய இடத்தில் பயப்படாமல் இருப்பது பகுத்தறிவின் செய்கையைக் காட்டிலும் வெறுக்கத்தக்கது.

— வடலூர் வள்ளலார்

# நமது நோக்கு

## ஏமாறுதே! ஏமாற்றுதே!!

11-3-91ல் ஜனாதிபதியாக இருந்த பிரேமதாசாவிற்கு அமைச்சர் தொண்டமான் ஓர் கடிதம் எழுதினார்.

கடிதத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கை என்ன? தோட்டங்கள் தனியார் கம்பனியிடம் கைமாறும்போது, தோட்டத்தொழிலாளர்களுக்கு வருடத்தில் 300 நாள் வேலை கொடுக்கப்படும் என்ற உறுதி இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, மலையகத் தமிழ் இளைஞர்களுக்காக, ஹட்டனில் தமிழ் மொழிமூலம் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டும்.

ஜனாதிபதி என்ன செய்தார்? கடிதத்தை அன்றைய பிரதமராக இருந்த டி. பி. விஜயதுங்காவிடம் கவனிக்கும்படி அனுப்பினார்.

இ. தொ. கா. வோடு பேச்சுவார்த்தை நடைபெற்றது; புரிந்துணர்வு ஏற்பட்டது. 16-6-91ல், கோரிக்கை நிறைவேற்றப்படும் என்ற வாக்குறுதி கொடுக்கப்பட்டது.

அடுத்த காட்சி என்ன? பிரேமதாசா மறைந்தார். ஜனாதிபதி கதிரைக்கு விஜயதுங்கா தூக்கிவைக்கப்பட்டார்.

ஆங்கிலத்திலே ஓர் அனுபவ மொழி உண்டு. "சிலர் புகழோடு பிறக்கிறார்கள்; சிலர் புகழைத் தேடுகிறார்கள்; சிலர்மீது புகழ் திணிக்கப்படுகின்றது!" (Some are born great; Some achieve greatness; To Some greatness is thrust upon them)

மூன்றாவது வகையைச் சேர்ந்தவர்தான் தற்போதைய ஜனாதிபதி என்பதில் இரு கருத்து இருக்க முடியாது என்பதுதான் பலரது கருத்து!

தேர்தல் நெருங்குகின்றதல்லவா? வேட்பாளராகி, ஜனாதிபதி பதவி என்ற தென்றலின் சுகத்தைக் காண வேண்டுமென்றால், சிங்கள வாக்காளரின் ஆதரவைப் பெறச் சில வாக்குறுதிகளை அள்ளிவீச வேண்டும்; சில வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட வேண்டும்!

எனவேதான், பிரதமராக இருந்து கொடுத்த வாக்குறுதியை, 1993 நவம்பரில் தூக்கிவீசத் துணிந்தார் ஜனாதிபதியாகிவிட்ட விஜயதுங்கா.

மலையகப் பகுதியில் இருவரதில் வாழ்ந்த எம். ஜி. ஆரின் படங்களில் வரும் பாடல்களை மலையகத்தவர் இன்றும் கேட்டு மகிழ்வதுண்டு!

அத்தகைய பாடல்களில் ஒன்றான "ஏமாறுதே; ஏமாற்றுதே!" என்ற பாடலை தொண்டமான் கேளாதிருந்திருப்பாரா?

எனவேதான், ஜனாதிபதி ஏமாற்ற முயன்ற போது, ஏமாறாது நின்ற தொண்டமான் ஏமாற்றுதே என்று துணிந்து குரல் கொடுக்க முன்வந்துள்ளார்!

காலபோக

# நெல் அறுவடைக்குப் பின்னர் மறுவயல் பயிர்செய்கை

கடந்த பல வருடங்களுக்குப் பின் யாழ். மாவட்டத்தில் 1993/1994 பெரும்போகத்தில் பரவலாக கூடிய மழைவீழ்ச்சி கிடைக்கப் பெற்றுள்ளது. இதன்காரணமாக மாவட்டத்தில் பெரும்பாலும் பல பகுதிகளிலும் நெல் அறுவடை நேரத்திலும் வயலில் நீர் நிற்கக்கூடிய நிலை இருக்கின்றது. ஆதலால் வயலில் உள்ள ஈரம்கூடிய நாட்களுக்கு நிலை நிற்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

தற்போதைய காலகட்டத்தில் எமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யவும் எமது மக்களுக்குள்ள போசாக்குச் சத்துக்குறைவை நிவர்த்தி செய்யவும் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் யாவரும் வயல் நிலங்களில் உள்ள ஈரத்தைப் பயன்படுத்தி தங்கள் வயல்களில் நெல் அறுவடைக்குப் பின் மறு வயல் பயிர்களான கௌபி, பயறு, நிலக்கடலை, உழுந்து, எள்ளு போன்ற பயிர்களையும் பசுந்தாள் பசளைப் பயிரான சணலையும் பயிரிடுவதில் முக்கிய கவனத்தைச் செலுத்தவேண்டியது அவசியமானதாகும்.

த. சிவலோகநாதன்

உதவி விவசாயப் பணிப்பாளர்

இப் பயிர்களைப் பயிரிடுவதனால் ஏற்படும் நன்மைகள் சிலவற்றையும் இச்சந்தர்ப்பத்தில் அறிதல் அவசியமாகும்.

* வளியிலுள்ள நைதரசனை வேர் கணுக்கள் மூலம் சேமித்து பயிர் தானும் எடுத்து நிலத்திற்கும் விடுகிறது.
* அறுவடையின்பின் உள்ள பயிர் எச்சங்கள் மண்ணுடன் சேர்ந்து மண்ணிற்கு வளத்தைக் கொடுக்கின்றது.
* அடுத்துவரும் காலபோகத்தில் நெற்செய்கை விளைவு அதிகரிக்க வாய்ப்புண்டு.
* பெறப்படும் விளைவு உடனடியாகச் சந்தைப்படுத்தும் வாய்ப்பு கிடைக்கின்றது.
* போசாக்கு நிறைந்த உணவாகப் பாவிக்கும்கூடியதாக இருக்கிறது.
* ஓரளவு இலாபத்தைப் பெறக்கூடியதாக இருக்கின்றது.
* தொடர்ச்சியாக நெல்லுக்கு ஏற்படும் பூச்சி புழுத்தாக்கத்தை மாற்றுப் பயிர்ச்செய்கை முறை கட்டுப்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்.
* தற்போதைய சூழ்நிலையில் எமது மாவட்டத்திற்குத் தேவையான போசாக்குச் சத்துள்ள உணவின் ஓர் பகுதியை உற்பத்தி செய்வதுடன் பாடசாலை மாணவர்களின் உணவுத் திட்டத்திற்கும் உதவிபுரிய முடிகிறது.
* பசுந்தாட்பசளைப்பயிரைப் பயிரிடுவதால் மண்ணின் கட்டமைப்பு மாறி மண்வளம் அடைகின்றது.
* களைப் பெருக்கத்தை தடுக்க முடிகின்றது.
* பயிர் மீதிகளை கால்நடை உணவாகவும் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புண்டு.

எனவே நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் யாவரும் நெல் அறுவடைக்குப் பின் மறுவயல் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு தாமும் பயன்பெறுவதோடு யாழ் மாவட்ட மக்களும் பயன்பெறச் செய்யலாம்.

# 500 தமிழ் அகதிகள் நாளை நாடு திரும்புவர்

(சென்னை)

500 இலங்கைத் தமிழ் அகதிகள் நாளை வெள்ளிக்கிழமை இலங்கைக்கு திரும்புகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த அகதிகள் அன்றைய தினம் இராமேஸ்வரத்தை விட்டு புறப்பட்டு அதே நாளே தலைமன்னார் போய்ச்சேருவார்கள் என்று தமிழக செய்திகள் தெரிவித்தன. (மி)

# 'சனிவிலேஜ்' கிராமத்தில் புதிய இராணுவ முகாம்

(மன்னார்)

மன்னார் சனிவிலேஜ் கிராமத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் புதிய இராணுவ முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

மன்னார் பெரு நிலப்பரப்பிலிருந்த பின்வாங்கி வங்காலை முதல் சிறுநாவற்குளம் வரை இராணுவ வேலியை அமைத்திருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் தமது நிலையைப் பலப்படுத்துவதற்காக சனிவிலேஜ் கிராமத்தில் இராணுவ முகாமை அமைத்துள்ளனர். ஏற்கனவே சனிவிலேஜ் கிராமத்திலிருந்த அகதி முகாமை அகற்றி அகதிகளை பேசாலை அகதி முகாமிற்கு படையினர் அனுப்பியுள்ளனர்.

மன்னாரிலே மன்னார்தீவு பெருநிலப்பரப்பில் ஒரு சிறு நிலப்பரப்பே இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ளது. - மி

# 'நினைவழியா நாட்கள்' நூல் ஒரு வரலாற்று பொக்கிஷம்

## அறிமுக விழாவில் இளங்குமரன்

(சாவகச்சேரி)

தமிழர்கள் எங்கின்ற வகையில் நாம் இரண்டாயிரத்திற்கு முற்பட்ட இலக்கியத்தை வைத்திருக்கின்றோம். தமிழர்களுடைய வீரம், தமிழர்களுடைய அறம் என்பவற்றை அது கூறிநிற்கின்றது. வளர்ச்சிக்கும், மேன்மைக்குமாக அது ஆக்கப்பட்டது.

இவ்வாறு கைதடி நவீண்ட பாடசாலையில் நடைபெற்ற கவிஞர் புதுவை இரத்தினதுரையின் நினைவழியா நாட்கள் என்னும் கவிதைத் தொகுப்பு நூலின் அறிமுக விழாவில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு.வே. இளங்குமரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

கைதடி கலை இலக்கிய நண்பர்கள் அவையால் நடாத்தப்பட்ட இவ் விழாவில் கவிஞர் புதுவை இரத்தினதுரைக்கு டாக்டர் திரு. சபாநாதன் அவையின் சார்பில் பொன்னாடைபோர்த்திக் கவிஞரை கௌரவித்தார். அவையின் தலைவர் திரு. கி. தங்கராசா தலைமையில் நடைபெற்ற இவ் அறிமுக விழாவில் திரு. இளங்குமரன் தொடர்ந்து தமது உரையில்;

பாரதிதாசனுக்குப் பின்புலத்தில் நிற்கும் கவிஞர்களாக புதுவை இரத்தினதுரையும், கவிஞர் காசி ஆனந்தனும் மிளிர்கின்றார்கள். கவிஞர் புதுவையின் நினைவழியாத நாட்கள் ஒரு வரலாற்றுப் பொக்கிஷம். அவை அனைவருடைய கைகளிலும் தவழவேண்டும்.

யாழ். மாவட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு.அன்பரசன், செல்வி மா. சற்குணேஸ்வரி, ப. செல்லத்துரை ஆகியோர் வாழ்த்துரையும், வலவை வளவன், கமலநாதன் ஆகியோர் மதிப்புரையும் வழங்கினர்.

கவிஞர் புதுவை தமது பதிலுரையில்: கவிதைகள், பாடல்கள், இலக்கியங்கள் யாருக்கும் சொந்தமானவை அல்ல. அவை நாங்கள் தேடிக் கொள்கின்றவை. இந்த வரலாற்று ஓட்டம் இடைநிறுத்தப்படக் கூடாது. தொடர்ந்து ஓடவேண்டும். தொடர்ந்து ஓடக்கூடிய இலக்கிய நண்பர்கள் அவை புதிய எழுத்தாளர்களை, கவிஞர்களை உருவாக்க வேண்டும். இந்த மண்ணின் நிகழ்வுகளை அடுத்த தலைமுறையினரிடம் நாங்கள் ஒப்படைக்க வேண்டும். விடியோவாகவோ, படமாகவோ, பாடலாகவோ தலைமுறை தலைமுறையாக ஊட்டப்பட வேண்டும். விடுதலை நிகழ்வுகளை நாம் எமது அடுத்த சந்ததியினருக்கு ஒப்படைக்க வேண்டும்.

காங்கேசன்துறையிலிருந்து புத்தளம் வரைக்கும், புத்தளம் தொட்டு குமரக்கோடு வரை பரந்த நிலப்பரப்பு எமக்கு இருக்கின்றது. வரலாற்று ஆவணமாக, விடுதலை ஆவணங்களாக ஆயிரம் நினைவழியா நாட்களாகக் கொண்டாட போராளிகள் நினைவழியா நாட்களை நீங்கள் பெற்றுத்தர வேண்டும் என்றார். —155—

அடுக்களைச் சாம்பல் அருமையான பொட்டாஸ்

# இலவச வகுப்புகள்

(உடுவில்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண, உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இலவச வகுப்புக்களை நடாத்த மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது.

நாளை 28ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் முதல் இலவச வகுப்பு நடைபெறும். யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. தேவராஜா வகுப்புகளை நடத்துவார். -109

# உளவளத் துணைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கலைச் அபிவிருத்தி நிலையம் ஒழுங்கு செய்து நடத்தும் உளவளத்துணைப் பயிற்சிநெறி இன்று புதன்கிழமை மாலை 1-30 மணிக்கு யாழ்/இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி நெறியில் குடும்பம், அபிவிருத்தி, சமூக மேம்பாடு என்பவற்றில் ஈடுபடும் மனித ஜீவன்களின் உளவள ஆரோக்கியத்தின் அத்தியாவசிய தேவையினை உணர்த்தும் வகையில் கருத்துக்கள் பரிமாறப்படவுள்ளது.

# சுதந்திரப்பறவைகள் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

"சுதந்திர பறவைகள்" தை மாத இதழ் வெளிவந்துள்ளது. இந்த இதழில் தமிழீழ சட்டத்துறை நிர்வாகத்தில் பெண்கள் வகிக்கும் பங்கு, ஆனை கட்டிய அரிமாத்தை, நாவற்குழி ஆண்டு நினைவில் சோதியா, தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் மகளிர் படையணி, தெளிவு இறுதியை நோக்கி பரிசு பெற்ற கறுப்பின பெண்மணி, போன்ற சிறப்பு அம்சங்களுடன் கவிதைகள், கட்டுரைகள் போன்ற பல்வேறு அம்சங்களும் வெளிவந்துள்ளது.

# இராசிபலன்

27 - 1 - 1994

வியாழக்கிழமை

( தமிழுக்கு தை 14 )

பூரணை மு. இ. 7-47 வரை பூசம் பி. இ. 1-34 வரை, அமிர்தசித்தயோகம், தைப்பூசம், பூரணை விரதம்.

மேஷம்: குறை கேட்டல், பணமுடை, அவசரப்பணி.

இடபம்: குடும்ப சுகம், வசதியான மாற்றம், பணவரவு.

மிதுனம்: ஏமாற்றம், தொழில் வெறுப்பு, அச்சம்.

கடகம்: வெகுமதி, இனிய சம்பாஷணை, தெய்வ தரிசனம்.

சிம்மம்: கடும் சினம், சகோதர வெறுப்பு, ஆதங்கம்.

கன்னி: குடும்ப உல்லாசம், சுபகாரியம், கருத்து மோதல்.

துலாம்: அதிக வருவாய், தாம்பூலம், பயணம்.

விருச்சிகம்: அமைதியின்மை, குடும்ப பிரிவு, அகால உணவு.

தனுசு: தடுமாற்றம், வெளியார் தலையீடு, மனக்குறை.

மகரம்: புதிய முயற்சி, தன லாபம், உருத்தனர் வருகை

கும்பம்: குதூகலம், நண்பர் சகவாசம், பாராட்டு.

மீனம்: வீண் சச்சரவு, மனப்பயம், பழைய பிரச்சினை.

— ஜோஸ்யர்

# ஆனைவிழுந்தானில் ஆடுவளர்ப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிக் கோட்டத்தில் உள்ள ஆனைவிழுந்தான் கிராமத்திலே அண்மையிலே ஆடு வளர்ப்புத் திட்டம் ஒன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம் ஆகிய கிராமங்களுக்கு இடைப்பட்ட காட்டுப் பிரதேசத்திலே அமைந்துள்ள இக் கிராமத்திலே றெட்பானா நிறுவனத்தின் செயற்பாட்டின் கீழ் சில காலங்களுக்கு முன்னர் இனக்கலவரத்தினால் இடம்பெயர்ந்த மலையகத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.

தற்போது றெட்பானா நிறுவனத்தின் உதவித் திட்டங்கள் முழுமையாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையால் இங்குள்ள மக்கள் பெரும் பொருளாதார இன்னல்களுக்கு மத்தியிலேவாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையினை அவதானித்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் முதற்கட்டமாக 12 பயனாளிகளுக்கு 5 ஆடுகள் வீதம் 60 ஆடுகளும் இனப்பெருக்கத்திற்கான 5 கடாக்களையும் வழங்கியுள்ளது.

அத்தோடு அவற்றினை பராமரிக்கும் ஆலோசனைகளும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளும் திட்ட கண்காணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இனி மாதங்களுக்கு முன்னர் இந்தக் கிராமத்திலே கோழி வளர்ப்புத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு பெரும் வெற்றியளித்துள்ளமையும் இங்கு பண்ணைமுறையில் கோழி வளர்ப்பதில் எதுவித முன் அனுபவமும் இல்லாத இம் மக்களுக்கு கோழி வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# படையினரின் இரும்பு கோட்டையை புலிகள் தகர்த்தெறிந்தனர்

## 'இன்சைட் றிப்போட்' விவரிப்பு

(யாழ்ப்பாணம்)

இதுவரை தமிழீழத்தில் மேற்கொள்ளப்பட்ட யுத்தங்களில் விடுதலைப் புலிகள் பூநகரி இராணுவ முகாம் மீது மேற்கொண்ட யுத்தமே அனைத்திலும் ஒரு தாய்ப்போராக விளங்குகின்றது.

'இன்சைட் றிப்போட்' என்ற தமிழீழ செய்தி மீளாய்வு வெளியீட்டில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி தியாகங்கள் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்த கட்டுரையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பூநகரிப் போரின் வெற்றியின் பெரும் பகுதி தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனையே சார்ந்தது.

ஒரு வருட காலம் சிறிதளவேனும் கண்ணுறக்கமோ, ஓய்வோ இல்லாது பூநகரித் தாக்குதலில் தனது முழுக் கவனத்தையும் செலுத்தி அதனை அவர் திட்டமிட்டு வந்தார்.

இதன் விளைவாக புலிகள் படையினரின் இரும்புக் கோட்டையைத் தகர்த்தெறிந்தனர்.

கடற்புலிகள், கரும்புலிகள், புலிகள் பெண்புலிகள் என அனைத்து தரப்பினரும் சகல முனைகளிலும் நின்று படையினரை எதிர்த்து தீரத்துடன் போரிட்டனர்.

பூநகரியிலுள்ள கடற்படை இராணுவ முகாம் ஒரு பயங்கர போர்க்களமாக மாறியது. ஒவ்வொரு முனையிலும் உக்கிரப் போர் நடந்தது.

ஒவ்வொரு முனையிலும் புலிகளின் தாக்குதலையும், முன்னேற்றத்தையும் படையினராக் தடுத்து எதிர்கொள்ள முடியாதிருந்தது. புலிகளின் வீரச்சமர் காலங்காலமாக வெற்றி நாளாகக் கொண்டாடப்படும் விதத்தில் அவர்கள் மிகத் தீரத்துடன் போராடினர்.

படையினர் தரப்பில் பீதியும் குழப்பமும் ஏற்பட்டது படையினர் தமது உயிரைக் காத்துக்கொள்ள சிதறி ஓடினர். அவர்களது கோட்டை அவர்களுக்கே ஒரு கல்லறையாக மாறியது.

பூநகரி சமர் அரசையும் அதன் படைகளையும் வெகுவாக உலுப்பி விட்டது. விடுதலைப் புலிகளை எவரும் இராணுவ ரீதியில் வெற்றிகொள்ள முடியாதென்பதை இது சந்தேகமற நிரூபித்துவிட்டது.

இந்தப் போரை அடுத்து புலிகள் புதுப்பலம் பெற்றுவிட்டனர். நீருந்து விசைப்படகுகள், டாங்கிகள், பீரங்கிகள் மற்றும் பெருமளவு ஆயுதங்கள் முன்னெப்போதும் இல்லாதவாறு புலிகளின் கைகளில் சிக்கியுள்ளன.

யாழ் குடா மீது படையினர் வைத்திருந்த இறுக்கமான பிடி இதன் மூலம் உடைத்தெறியப்பட்டுள்ளது. -இ-ம்

# கடல் தொழில் விரிவாக்கல் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கடல்தொழில் விரிவாக்கல் சம்பந்தமான கலந்துரையாடல் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் கடல்வள விரிவாக்கல் அபிவிருத்தித்துறை அதிகாரிகள், மீன்பிடி பயிற்சிப் பாடசாலை பிரதிநிதிகள், மீன்பிடிப் பரிசோதகர்கள், இணைச்செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

யாழ் மாவட்டத்திலுள்ள கடல்வளங்களை விரிவுபடுத்துதல், இத் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு கடல்வள அடையாள அட்டை வழங்குதல் இவர்களுக்கு சேவைப்புறு மேற்கொள்ளுதல் போன்ற விடயங்கள் பற்றி இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. (162

# மதுவரி பாதுகாவலர் நேர்முகப் பரீட்சை

(கொழும்புத்துறை

கொழும்பு மதுவரித் திணைக்கள ஆணையாளரினால் கோரப்பட்ட மதுவரிப் பாதுகாவலர் பதவிக்குரிய ஆரம்ப நேர்முகப்பரீட்சை ஜனவரி 31ம் திகதி திங்கட்கிழமையும், பெப்ரவரி 1ம் திகதி செவ்வாய்க்கிழமையும், 2-ம் திகதி புதன்கிழமையும் வடமாகாண மதுவரி ஆணையாளர் திணைக்களத்தில் நடைபெறும்.

நேர்முகப்பரீட்சைக்குரிய கடிதங்கள் யாவும் விண்ணப்பதாரர்களுக்கு 24ம் திகதி திங்கட்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதங்களை தமக்கு பகுதி அஞ்சல் அலுவலகங்களில் தாமதிமாது நேரில் சென்று பெற்றுக்கொள்ளுமாறும் இந் நேர்முகப் பரீட்சைக்கு வரும் போது தவறாது தமது தேசிய அடையாள அட்டையைக் கொண்டுவருமாறும் வடமாகாண மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் கூறியுள்ளார். (154 கி)


# இடமாற்ற அறிவித்தல்

செல்லையா சிவபாதலிங்கம்

॰ வைரக்கல் நகை வியாபாரம் ॰

218, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் விலாசத்தில் நடைபெற்று வந்த

★ செல்லையா சிவபாதலிங்கம் ★

॰ வைரக்கல் நகை வியாபாரம் ॰

கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து

இல. 191 H, கஸ்தூரியார் வீதி

(வின்சர் படமாளிகைக்கு எதிராக)

யாழ்ப்பாணம்

என்னும் முகவரியில் நடைபெற்று வருகின்றது என்பதை

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## செல்லையா சிவபாதலிங்கம்

॰ வைரக்கல் நகை வியாபாரம் ॰

191 H, கஸ்தூரியார் வீதி

(வின்சர் படமாளிகைக்கு எதிராக)

யாழ்ப்பாணம்.

முக்கிய குறிப்பு:

॰ இந்த ஸ்தாபனத்துக்கு வேறு எங்கும் கிளை ஸ்தாபனங்கள் இல்லை என்பதை அறியத்தருகிறோம்.

(எ-3783)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

அரும்பொருளகம்

எமது வரலாற்றின் எச்சங்கள் பலவற்றைத் தேடிப் பாதுகாக்கும் நோக்குடன் நமது பல்கலைக்கழகத்தில் அரும்பொருளகம் ஒன்று வரலாற்றுத்துறையினரால் புனரமைக்கப்பட்டுள்ளது. இவ்வரும் பொருளகத்தில் பழைய ஏட்டுச் சுவடிகள், நாணயங்கள் (காசுகள்), நமது கலைஞரின் கைவண்ணத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டும் பல்வகை உலோகங்களில் அமைந்துள்ள தட்டங்கள், பாக்குவெட்டிகள், குத்துவிளக்குகள் போன்றவைவும், ஆலய வழிபாட்டிற்குரிய சிறப்பான பொருட்களும் சேகரித்து வைக்கப்படவுள்ளன. இவற்றை வைத்திருப்போர் நமது பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்பு செய்யும்படி அன்புடன் விண்ணப்பிக்கிறோம். இதற்கான சான்றிதழ்களும் வழங்கப்படும். இப்பொருட்களுக்குரிய சன்மானம் கோருவோருக்கும் இவற்றுக்குரிய பெறுமதி வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகிறோம்.

துணைவேந்தர்,

யாழ். பல்கலைக்கழகம்.

(எ-8787)


எட்டாம் ஆண்டு

# நெஞ்சின் நினைவலைகள்.....



## அமரர் சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன்

| மலர்வு : | உதிர்வு : |
| --- | --- |
| 03 - 05 - 1908 | 26 - 01 - 1986 |

எங்கள் தந்தையரே! ஆண்டுகள் எட்டு அதற்குள் அகன்றுவிட்டனவே!

நினைவு தினமோ தைப்பூச நிகழ்வினிலே கலந்து நினைவின் நினைவாகிவிட்டது.

எங்கள் எண்ணமெனும் நெய்யூற்றி
தங்கள் நினைவெனும் திரியமைத்து
நாமேற்றிய தீபம்—
ஆன்மதீபம் — என்றென்றும் எங்கள்
இதயத்தில் நந்தா விளக்காய் ஒளிர
அம்பிகைபாகனாகிய ஆண்டவன் அருள்வான்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"மணிமனை"

மல்லாகம்,

27 - 01 - 94.

(இ-750)

